**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 329/2023 P.W.1/L.W.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. நீலகண்ட பிள்ளை | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. தாணுபிள்ளை | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 18.06.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து நீர்வளத்துறையில் உதவியாளராக பணிச் செய்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்குத் தெரியும். 01.07.2023 ம் தேதி மாலை 03.00 மணியளவில் சரல் கோவில் திருவிழா சமபந்தி விருந்தில் கலந்துக்கொண்டு வீட்டிற்கு வரும்போது சரல் அருகே அமைந்துள்ள பழைய ரேசன் கடைக்கு முன்பாக வைத்து குற்றம் சுமத்தப்பட்ட நபர் என்னை தேவடியாமவனே, புண்டாமவனே என்று அசிங்கமான வார்த்தைகளால் பேசி என் மகனின் சம்மந்தத்தை நீ தானே விலக்கினாய் என்று எனது சட்டை காலரை பிடித்து கையால் கன்னம், முதுகு ஆகிய பகுதிகளில் அடித்து கீழே தள்ளி வலது கால் முட்டின் அருகே கருங்கல்லால் என்னை குற்றம் சுமத்தப்பட்ட நபர் அடித்தார்.

2. அருகிலிருந்த வினிஷ், நீலகண்டபிள்ளை ஆகியோர் என்னை ஆட்டோவில் ஏற்றி இராஜக்கமங்கலம், பி.பி.எம். மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். அதன் பிறகு சம்பவம் சம்மந்தமாக நான் புகார் மனுக் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u> :

**1.** சூரப்பள்ளம் மஞ்சாடி திருக்கோவிலில் நான் நிர்வாகியாக இல்லை. ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர் மேற்படி திருக்கோவிலில் நிர்வாகியாக உள்ளாரா என்று எனக்குத் தெரியாது. நான் போலீஸ் விசாரணையில் எனக்கும் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் இடையே மேற்படி கோவில் நிர்வாகம்சம்மந்தமாக பிரச்சினை இருந்ததை சொல்லவில்லை. சரல் கோவில் அருகே ரேசன் கடை பக்கத்தில் நான்நின்றுக்கொண்டிருந்ததாக நான் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

2. நான் எனது புகார் மனுவில் சமபந்தி விருந்திற்கு சென்று வந்ததை சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். குற்றம் சுமத்தப்பட்ட நபர் மேற்படி கோவிலுக்கு சமபந்தி விருந்திற்கு சென்றுவிட்டு திரும்ப வருவது தெரிந்து நான் அவரை தாக்குவதற்காக அந்தயிடத்தில் நின்றுக்கொண்டிருந்தேன் என்றால் சரியல்ல. 01.07.2023 ம் தேதி மதியம் 03.20 மணிக்கு குற்றம் சுமத்தப்பட்ட நபரை நான் ரெகு என்பவர் வீட்டு அருகில் வைத்து தாக்கி காயப்படுத்தியதாக குற்ற எண் 91/2023 வழக்கு பதிவுச் செய்யப்பட்டு இதே நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ளது என்றால் சரிதான்.

3. நான் மேற்படி சம்பவத்தை மறைப்பதற்காக உண்மைக்கு மாறாக இந்த வழக்கை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. புகார்மனுவில் குற்றம் சுமத்தப்பட்ட நபர் கல் எடுத்து என் காலில் போட்டதாக உண்மைக்கு மாறாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் குற்றம் சுமத்தப்பட்ட நபரை தாக்கிவிட்டு ஓடும்போது எனக்கு ஏற்பட்ட காயத்தை வைத்து நான் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4. குற்றம் சுமத்தப்பட்ட நபர் 4 முறை வெள்ளிச்சந்தை ஊராட்சியில் கவுன்சிலராக இருந்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியவில்லை. குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மனைவி வெள்ளிச்சந்தை ஊராட்சியின் தலைவியாக இருந்தார் என்றால் கேள்விபட்டுள்ளேன். குற்றம் சுமத்தப்பட்ட நபர் கவுன்சிலர் என்பதால் தனது பகுதிகளுக்குட்பட்ட நபர்களுக்கு உதவிகள் செய்வார் என்றால் அது எனக்குத் தெரியாது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் எனக்கு உறவினர் இல்லை.

5. குற்றம் சுமத்தப்பட்ட நபரின் வளர்ச்சி பொறுக்காமல் அவரின் மகனின் திருமணத்தை நானும் இன்னொரு நபரும் சேர்ந்து பெண் வீட்டில் சென்று பேசி அதை நிறுத்திவிட்டோம் என்றால் இல்லை. என் வேலைக்காக குற்றம் சுமத்தப்பட்ட நபரும் உதவிகள் செய்தார் என்றால் இல்லை. குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் எனக்கு ஏற்பட்ட காயத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. பட்டியல் சாட்சி 2 என் சித்தப்பா ஆவார்.

6. புகார் மனுவில் காயம் அடைந்தவுடன் நீலகண்டபிள்ளையும் வினிஷ்என்னை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றால் சரிதான். மருத்துவமனைக்கு

**என்னுடன் 5, 6 நபர்கள் வந்தார்கள். மருத்துவரிடம் சங்கதியை உடனிருந்தவர்கள் சொன்னார்கள். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் நான் அவரை தாக்கியதற்காக இந்த வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.**

**குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.**

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,

இரணியல்.

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 329/2023 P.W. 2/L.W.2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. நீலகண்ட பிள்ளை | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. ஈஸ்வரபிள்ளை | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 18.06.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை** :

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கூலி வேலைச் செய்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்குத்தெரியும். அ.சா1 எனது அண்ணன் மகன். 01.07.2023 ம் தேதி மதியம் 03.00 மணியளவில் சரல் ஊர் கோவிலில் திருவிழா நடந்தது. அங்கு கலந்துவிட்டு அதன் பிறகு சரல் பழைய ரேசன் கடை அருகே நான் வந்தபோது நான் ஒரு கடையில் மிட்டாய் வாங்குவதற்காக சென்றேன். அ.சா1 எனக்கு முன்னால் சென்றுக்கொண்டிருந்தார். அப்போது குற்றம் சுமத்தப்பட்ட நபர் அ.சா1ன் சட்டையை பிடித்து கீழே தள்ளி காலால் மிதித்து கல்லால் அ.சா1ன் வலது காலில் அடித்தார்.

2. அ.சா1 வலிதாங்கமுடியாமல் சத்தம் போட்டார். நானும் வினிஷ் என்பவரும் சேர்ந்து அ.சா1ஐ ஆட்டோவில் ஏற்றி இராஜாக்கமங்கலம் பி.பி. எம் மருத்துவமனையில் சிகிட்சைக்காக கொண்டுச் சேர்த்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** :

1. அ.சா1 க்கும் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் இடையே கோவில் நிர்வாகத்தில் பிரச்சினை எதுவும் இல்லை. சரல் கோவிலுக்கு நான் சாப்பிடுவதற்கு 12.30 மணிக்குப் போனேன். நானும் அ.சா1 ம் வேறு வேறு பந்தியில் இருந்து சாப்பிட்டோம். நானும் அ.சா1 ம் வீட்டிற்கு போகும் போது ஒன்றாக பேசிக்கொண்டு சென்றோமா என்றால் இல்லை, 20 அடி தொலைவில் சென்றோம். அ.சா1 ன் வீட்டிற்கும் எனது வீட்டிற்கும் இடையே 1 கி.மீ தொலைவு இருக்கும்.

2. நான் சம்பவம் நடக்கும் போது அதை விலக்கிவிட எந்த முயற்சியும் செய்யவில்லை என்றால் சரிதான். நானும் வினிஷும் சேர்ந்து அ.சா1 ஐ ஆட்டோவில் அனுப்பி வைத்துவிட்டோம் என்றால் சரிதான். நான் அ.சா1 உடன் மருத்துவமனைக்கு சென்றதாக எனது வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

3. அ.சா1 தான் குற்றம் சுமத்தப்பட்ட நபரை ஜார்ஜ் வீட்டு முன்பு வைத்து தடுத்து நிறுத்தி காயப்படுத்தியதாக இதே நீதிமன்றத்தில் வழக்கு உள்ளது என்றால் எனக்குத் தெரியாது. மேற்படி வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக இந்த வழக்கு உண்மைக்கு மாறாக கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், நான் சமபந்தி விருந்திற்கு போகவில்லை என்றாலும், வழக்கு சம்பவத்தை பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் என் உறவுக்காரருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4. குற்றம் சுமத்தப்பட்ட நபர் 4 முறை கவுன்சிலராகவும், அவரது மனைவி ஊராட்சி மன்ற தலைவராகவும் இருந்தார் என்றால் சரிதான். குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மகனின் திருமணத்தை அ.சா1 ம், இன்னொரு நபரும் சேர்ந்து பெண் வீட்டில் சென்று பேசி நிறுத்திவிட்டார்கள் என்றால் அது எனக்குத் தெரியாது.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 329/2023 P.W. 3/L.W.3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. வினிஷ் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. சிவராமலிங்கம் | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 18.06.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை** :

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கொத்தனராக வேலைச் செய்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்குத்தெரியும். அ.சா1 ஐ எனக்குத் தெரியும். சண்டை நடந்த போது பார்த்தேன். 01.07.2023 ம் தேதி மாலை 03.00 மணியளவில் சரல் பழைய ரேசன் கடை அருகே வைத்து அ.சா1 ஐ குற்றம் சுமத்தப்பட்ட நபர் கல்லால் தாக்கினார். அதில் அவருக்கு வலது காலில் அடிபட்டது. அதற்கு முன்பு அ.சா1 ஐ குற்றம் சுமத்தப்பட்ட நபர், அ.சா1ன் சட்டையைப்பிடித்து கையால் அவரது நெஞ்சில் இடித்து அவரை கீழே தள்ளி அதன் பிறகு அவரை கல்லால் தாக்கினார்.

2. ஆட்டோவில் நானும், மற்றும் சிலரும் சேர்ந்து அ.சா1 ஐ இராஜாக்கமங்கலம் பி.பி.எம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** :

1. எனக்கு வில்லுக்குறி பக்கம் குதிரைபந்திவிளை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் என் வீட்டிற்கும் இடையே 5 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். அ.சா1க்கும் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் இடையே கோவில் நிர்வாகத்தில் பிரச்சினை இருந்ததாக யாரும் சொல்லவில்லை. நான் சமபந்தி விருந்திற்கே வரவில்லை.

2. நான் சரல் ஊருக்கு பைக்கில் வந்தேன். சரலில் எனக்கு உறவினர் யாரும் இல்லை, அரசன்விளையில் தான் உள்ளார்கள். புகார்தாரரின் பெயர் விலாசம் எனக்கு தெரியாது. ஆட்டோவை நான் பிடிக்கவில்லை. நான் மருத்துவமனைக்கு அவரை சேர்க்க செல்லவில்லை என்றால் சரிதான். நான்சம்பவயிடத்தில் இல்லை என்றாலும் என் நண்பருக்காக நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.